விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 334 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 02 செவ்வாய்க்கிழமை (18.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

- பலத்த பாதுகாப்புடன் -

# திருகோணமலையில் மீண்டும் நிறுவப்பட்ட புத்தர் சிலை



(திருகோணமலை)

திருகோணமலை கடற்கரையிலிருந்து நேற்று முன்தினம் இரவு அகற்றப்பட்ட புத்தர் சிலை நேற்று பலத்த பொலிஸ் பாதுகாப்புடன் மீண்டும் நிறுவப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வந்தமர்ந்த புத்தர்; அமைதிக்குப் பங்கம்

### மேயர் பொலிஸில் முறைப்பாடு

(திருகோணமலை)

திருகோணமலையில் மீண்டும் நிறுவப்பட்ட புத்தர் சிலையால் அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து திருகோணமலை மாநகர சபையின்

15ஆம் பக்கம் பார்க்க

## பேரினவாதத்துக்கு அரசு அடிபணிந்துள்ளது

### சுமந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவும் தேசிய மக்கள் சக்தி அரசும் பேரினவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு கோழைத்தனமாக அடி

16ஆம் பக்கம் பார்க்க

பங்களாதேஷ் முன்னாள் பிரதமர்

## ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை



(டாக்கா)

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா கடந்த ஆண்டு மாணவர் தலைமையிலான போராட்டங்களை வன்முறையாக ஒடுக்கியதில் மனித குலத்திற்கு எதிரான

15ஆம் பக்கம் பார்க்க

## திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு பிறிதொரு சட்டம் கிடையாது. அதே போல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொதுச் சட்டத்துக்கு

02ஆம் பக்கம் பார்க்க

பௌத்தத்துக்கு முன்னுரிமை அளியுங்கள்

## புத்தர் சிலை விவகாரத்தில் பொலிஸார் தலையிட்டது ஏன்?



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கேள்வி

(கொழும்பு)

திருகோணமலை புத்தர் சிலை விவகாரத்தில் பொலிஸார் தலையிட்டது ஏன் எனக் கேள்வி எழுப்பியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பௌத்த மதத்துக்கு முன்னுரிமை அளியுங்கள் என்று வலி

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் கரையொதுங்கிய சிலை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளலாய் கடற்கரைப் பகுதியில் சிலையொன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

சிலையின் கைகள் சேதமடைந்த நிலையில் காணப்

15ஆம் பக்கம் பார்க்க

## கொடிகாமம் குளத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

### விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

### சட்டத்தரணி சுகாஷ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில், கொடிகாமம் குளத்திலிருந்து மீட்கப்பட்ட இளைஞனின் வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்கு நீதிமன்றம் மீண்டும் உத்தரவு பிறப்பித்துள்ளதாக சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## மருத்துவ பீட மாணவன் போதையுடன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ஒருவர் போதைப் பொருட்களுடன் நேற்று

15ஆம் பக்கம் பார்க்க

## நம்பி வாக்களித்த மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளீர்கள்

### பாராளுமன்றில் கஜேந்திரகுமார்



(கொழும்பு)


"நீங்கள் சொன்னதை எல்லாம் நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கு நீங்கள் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கிறீர்கள்" என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

16ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் ஆண்டு நினைவில் உங்கள் நினைவுகள் சுமந்து...



மனம் மகிழ 22 . 01 . 1941

மனம் நெகிழ 30 . 11 . 2024

அமரர் ஆறுமுகம் கோபாலு

அன்பின் உருவமானீர் அணையா விளக்கானீர்
நெஞ்சங்களில் நிலையானீர்
மனம் உங்களை நினைத்து சோர்ந்து போகையில்
உங்கள் நினைவுகள்
சூழ்ந்துகொள்கின்றன
மனதை சமாதானம் செய்ய
காலத்தின் விதியோட்டத்தில்
காலனின் கடமையால்
விண்ணுலகில் நீங்கள்
பூவுலகில் நாங்கள்
கடவுளின் ஈருலோக விந்தையில்
உங்களை பிரிந்து தவிக்கின்றோம்
நேற்று எம் அருகே கதிரையில்
இருக்கிறதாய் உணருகையில்
ஓராண்டையும் காலசக்கரத்தில்
கடந்து விட்டோம் நினைவுகளுடனே

இல. 114, 2 ம் யூனிற்,
தருமபுரம் மேற்கு.
(C-4347)
பேரன்: தெ.லக்ஷிகன்
தெய்வம் பல்பொருள் வாணிபம்



31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

19.11.2025



தோற்றம் 07 - 05 - 1938

மறைவு 20 - 10 - 2025

அமரர் சூரியகாந்தி சின்னத்துரை

[திதி: ஐப்பசி தேய்பிறை சதுர்த்தசி]
[குகன் குடிசை]

20.10.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (19.11.2025) புதன்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலையில் நடைபெற்று கீரிமலை புனித சமுத்திர தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும்.

அன்றைய தினம் (19.11.2025 புதன்கிழமை) மு.ப 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் (குகன் குடிசையில்) நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

‘குகன் குடிசை’
பொலிகண்டி.
(C-4346)
தகவல்: குடும்பத்தினர்


## திருகோணமலையில்...

திருகோணமலை மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் ஏற்கனவே உள்ள அரசமரத்துடன் இணைந்த புத்தர் சிலை கட்டுமானத்தை அண்மித்து புதிய வணக்கஸ்தல கட்டுமானப் பணிகள் கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் ஆரம்பிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் காலை இது தொடர்பில் அறிந்த கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்தைப் பார்வையிட்ட நிலையில் அங்கு பிக்குகளுக்கும் அதிகாரிகளுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டன.

பின்னர் இந்த விடயம் தொடர்பாக திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் திணைக்கள அதிகாரிகள் முறைப்பாடு செய்ததன் அடிப்படையில் கட்டுமானப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துமாறு பொலிஸார் பணித்தனர்.

ஆனால் அதனைப் பொருட்படுத்தாது நேற்று முன்தினம் இரவு புத்தர் சிலை வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அவ்விடத்துக்கு வந்த பொலிஸார் சிலை வைக்கும் செயற்பாட்டை தடுத்த போது பிக்குகளுக்கும் பொலிஸாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது, பொலிஸார் புத்தர் சிலையை அகற்றியதுடன் பதற்ற நிலைமை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில் பாதுகாப்பு காரணங்களுக்காகவே திருகோணமலையில் புத்தர் சிலை அகற்றப்பட்டதாகவும் அது இன்று (நேற்று) மீண்டும் அதே இடத்தில வைக்கப்படுமெனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால பாராளுமன்றில் நேற்று அறிவித்திருந்தார்.

இந்நிலையில் புத்தர் சிலை நேற்று அங்கு பலத்த பாதுகாப்புடன் நிறுவப்பட்டுள்ளது. (ம-7)

## திருகோணமலை...

கட்டுப்பட வேண்டும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை (17) நடைபெற்ற வரவு செலவுத் திட்டத்தின் வெளிவிவகாரம் மற்றும் நீதியமைச்சுக்கான குழுநிலை விவாதத்தில் உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு என்று பிறிதொரு சட்டம் கிடையாது. அதேபோல் பௌத்த துறவிகளுக்கு என்றும் பிறிதொரு சட்டம் கிடையாது. அனைவரும் பொதுச்சட்டத்துக்குக் கட்டுப்பட வேண்டும்.

இனவாதம் மற்றும் வெறுப்புப் பேச்சுகளுக்கு இடமளிக்க முடியாது. வடக்கு, தெற்கு, கிழக்கு என்று வேறுபாடின்றி அனைத்து இன மக்களையும் நாங்கள் ஒருமித்தே பார்க்கிறோம். அனைவரும் சமமாக நடத்தப்படுவார்கள்.

வழக்குத் தொடுநர் அலுவலகம் பற்றி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்ட ஒருசில விடயங்களை ஏற்றுக்கொள்கிறோம். இந்த அலுவலகம் இந்த நாட்டில் இடம்பெற்ற சகல குற்றங்கள் குறித்தும் ஆராயும். இந்த அலுவலகத்தின் செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி விரிவாகக் கலந்துரையாடலாம் என்றார். (ம-7)


நீங்காத நினைவில்
11 ஆண்டுகள்

18.11.2025

பொன்னாலையூர்
அமரர் வேலாயுதர் இரத்தினம்
(இரத்தினம் விதானையார்)



மலர்வு 17.03.1951

உதிர்வு 20.11.2014

திதி : கார்த்திகை சதுர்த்தசி

இனி ஒரு ஜென்மம் வேண்டும்
என்று எண்ணியதில்லை
ஆனால் அவ்வாறு நிகழ்ந்தால்
மறுபடியும் உங்கள் பிள்ளையாக
பிறக்கும் வரம் மட்டும்
போதும் அப்பா!

என்றும் நினைவில்...
குடும்பத்தினர்
(1717)
பொன்னாலை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிறீதரன் எம்.பி இந்தியா விஜயம்



(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன் எம்.பி. இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

சிவஞானம் சிறீதரன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இந்தியா பயணமானதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் ஜார்கண்ட் மாநிலத்தின் ராஞ்சியில் நடை பெறும் எரிசக்தி மாற்ற தயார் நிலைக் குறியீடு நிகழ்வில் பங்கேற்பதற்காகவே அவர் இந்தியா பயணமானார்.


இந்தப் பயணத்தில் இந்தியாவின் அரசியல், சமூகத் தலைவர்களை அவர் சந்தித்துக் கலந்துரையாடுவார் என்று தெரியவருகின்றது. (நி)

# மதீனா சென்ற பேருந்து விபத்து!

## 42 இந்திய யாத்திரீகர்கள் உயிரிழப்பு!

**(ஜெத்தா)................................**

**சவூதி அரேபியாவின் முஃப்ரிஹாத் அருகே நேற்று திங்கட்கிழமை அதிகாலை மக்காவிலிருந்து மதீனாவுக்குச் சென்ற பேருந்து டீசல் டேங்கர் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானது.**



இந்த விபத்தில் சுமார் 42 இந்திய உம்ரா யாத்ரீகர்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பலர் ஹைதராபாத்தைச் சேர்ந்தவர்கள் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விபத்தின் தாக்கம் கடுமையாக இருந்ததால், பல பயணிகள் உயிரிழந் தனர் மற்றும் பலர் காயமடைந்தனர் என்று ஆரம்ப அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அவசரகால குழுக்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அதிகாரிகள் இன்னும் உயிரிழப்புகளின் சரியான எண்ணிக்கையை சரி பார்த்து, பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக ஜெட்டாவில் உள்ள இந்திய துணைத் தூதரகம் கட்டுப் பாட்டு அறையை அமைத்துள்ளது. (நி)

## அரசாங்கத்திற்கு எதிரான பேரணி பயனற்றது

### அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு எதிராக, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ள எதிர்ப்பு பேரணி பயனற்றது என கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தாமரை கோபுரத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் மக்களுக்காக எவ்வளவு அர்ப்பணிப்புடன் பணியூற்றுகிறது என்பது மக்களுக்கு தெரியும்.

நாட்டில் இடம்பெறும் ஊழல் மோசடிகள், கொள்ளைகள், போதைப்பொருள் குற்றங்களை தடுப்பதற்கு இந்த அரசாங்கம் தீவிரமாக பணியாற்றி வருகிறது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்களின் அன்பை வென்று ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

நாட்டின் பொருளாதாரத்தை வீழ்த்தியவர்கள், மோசடியாளர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தான் அரசாங்கத்துக்கு எதிராக பேரணியை முன்னெடுக்க முயற்சிக்கின்றனர்.

எனவே, இந்த எதிர்ப்பு பேரணியால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதுவும் செய்ய முடியாது. மக்கள் தெளிவாக உள்ளார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு அச்சம்

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு



(கொழும்பு)

கூட்டுறவுத் தேர்தல்களில் தோல்வி ஏற்படுவதால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் சட்டம் இயற்றிக் கொடுப்பதற்கு பாராளுமன்றம் தயாராகவே உள்ளது. பழைய முறைமையின் கீழ் தேர் தலை நடத்தலாம்.

ஆனால், கூட்டுறவுத் தேர்தல்களில் தோல்வி ஏற்படுவதால், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகின்றது என்பதே உண்மை என குறிப்பிட்டார். மாகாண சபைத் தேர் தலை நடத்துவதற்கு வரவு- செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்தல் முறைமை தொடர்பில் தீர்மானம் எடுக்க வேண்டியது பாராளுமன்றத்தின் பொறுப்பு என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது வரவு செலவுத் திட்ட உரையில் வலியுறுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் கொடும்பாவிகளை எரித்த தோட்டத் தொழிலாளர்கள்



(ஹற்றன்)

மஸ்கெலியா பேருந்து நிலையப் பகுதியில் நேற்று பெருந்தோட்ட தொழிலாளர்களினால் நடத்தப்பட்ட கண்டனப் போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தொழிலாளர்களின் வேதன உயர்வை எதிர்த்து சில அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் முன்வைத்த கருத்துகளுக்கு எதிராக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பெருந்தோட்ட தொழிலாளர்கள் பதாகைகள் ஏந்தி கோஷங்கள் எழுப்பியபடி மஸ்கெலியா நகரின் பிரதான வீதியூடாக பேருந்து நிலையத்தை நோக்கி ஊர்வலமாக சென்றனர்.

போராட்டத்தின் போது கருத்து தெரிவித்த தொழிலாளர்கள், கடந்த 202 ஆண்டுகளாக நாட்டிற்கு அன்னிய செலாவணி பெற்றுத்தரும் பெருந்தோட்ட தொழிலாளர் சமூகம் இன்றளவும் குறைந்த வருமானத்தால் தவித்துக் கொண்டிருக்கிறது.

வரவிருக்கும் ஜனவரி மாதம் முதல் தோட்ட நிர்வாகம் 200 ரூபாவும், அரசாங்கம் 200 ரூபாவும் வழங்கும் வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கது.

இத்தகைய நியாயமான தீர்மானத்திற்கு எதிராக சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் வாதிடுவது ஏற்க முடியாதது என்று தொழிலாளர்கள் வலியுறுத்தினர்.

அத்துடன் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதனத்திற்கு எதிராக பாராளுமன்றத்தில் குரல்கொடுத்த அரசியல்வாதிகளின் கொடும்பாவியும் எரிக்கப்பட்டது. (நி)

## தேங்காய் விற்பனையில் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் தேங்காய் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதன்படி, வாராந்த தேங்காய் ஏல விற்பனையில், 0.12 சதவீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேங்காய் விலை அதிகரித்த நிலையில் உள்நாட்டு சந்தையில் பெரிய தேங்காய் ஒன்றின் மொத்த விலை 175 முதல் 185 ரூபாயாக விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன் சிறிய தேங்காய் ஒன்றின் மொத்த விலை 150 முதல் 160 ரூபாயாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை காரணமாகவே தேங்காய் விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரை

# முழுமையாக கைப்பற்றியது பாகிஸ்தான்

**இலங்கை அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் வெற்றி பெற்று பாகிஸ்தான் அணி தொடரை 3-0 என்ற கணக்கில் முழுமையாக கைப்பற்றியது.**




பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ராவல்பிண்டியில் நடை பெற்றது.

இலங்கை அணி முதலில் துடுப்பாட்டத்தை தொடங்கியது. பதும் நிசங்கா 24 ஓட்டங்களும் கமில் மிஷாரா 29 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

பின்னர் வந்த குசால் மெண்டிஸ் 34 ஓட்டங்களிலும் கமிந்து மெண்டிஸ் 10 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து வெளியேறினர்.

அப்போது இலங்கை அணி 26 ஓவர்களில் 4 விக்கெட் இழப்பிற்கு 123 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது.

அதன் பின்னர் பாகிஸ்தானின் மிரட்டலான பந்துவீச்சில் அடுத்த விக்கெட்டுகள் சரிந்தன. இதனால் இலங்கை அணி 45.2 ஓவரில் 211 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டனர்.

அதிகபட்சமாக சமரவிக்ரமா 48 ஓட்டங்களும் பவன் ரத்னயாகே 32 ஓட்டங்களும் எடுத்தனர். முகமது வாசிம் 3 விக்கெட்டுகளும், ஃபைசல் அக்ரம் மற்றும் ஹாரிஸ் ராஃப் தலா 2 விக்கெட்டுகளும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணியில் 44.4 ஓவரில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 215 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது.

மொஹம்மது ரிஸ்வான் 61 ஓட்டங்களும், ஃபஹர் ஜமான் 55 ஓட்டங்களும், ஹுசைன் தலத் 42 ஓட்டங்களும் எடுத்தனர். இலங்கையின் ஜெஃப்ரே வாண்டர்சே 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இந்த வெற்றியின் மூலம் பாகிஸ்தான் அணி 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி இலங்கையை ஒயிட்வாஷ் செய்தது. (3)

## ‘சென்னை சூப்பர் கிங்ஸ்’ அணியின்

# தலைவரானார் ருதுராஜ்



ஐபிஎல் தொடரில் அடுத்த சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை ருதுராஜ் கெய்க்வாட் தலைவராக வழிநடத்துவார் என அணி நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு ஐபிஎல் சீசனுக்காக அணிகள் அனைத்தும் தங்களுக்குத் தேவையான வீரர்களை தக்கவைத்தும், விடுவிக்க விரும்பும் வீரர்களை விடுவித்தும் வருகின்றன.

அந்த வகையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் கப்டன் சஞ்சு சாம்சனை சென்னை சூப்பர் கிங்ஸ் அணிவாங்கியுள்ளது. சஞ்சு சாம்சனுக்குப் பதிலாக சென்னை அணியிலிருந்து ரவீந்திர ஜடேஜா மற்றும் சாம் கரண் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிக்கு விற்கப்பட்டுள்ளனர்.

அடுத்த ஐபிஎல் சீசனுடன் ஐபிஎல் தொடரிலிருந்து மகேந்திர சிங் தோனி ஓய்வு பெற்றுவிடுவார் எனக் கூறப்படுவதால், விக்கெட் கீப்பரான சஞ்சு சாம்சனை தொலைநோக்குப் பார்வையுடன் சென்னை அணி வாங்கியுள்ளது. சென்னை அணியுடன் இணைந்துள்ள சஞ்சு சாம்சன் அணியின் தலைவராக நியமிக்கப்படலாம் என்ற தகவலும் வேகமாகப் பரவியது.

இந்த நிலையில், அடுத்த சீசனில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியை ருதுராஜ் கெய்க்வாட் தலைவராக வழிநடத்துவார் என சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்வாகம் அதிகாரபூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

கடந்த ஐபிஎல் சீசனில் காயம் காரணமாக ருதுராஜ் கெய்க்வாட் தொடரின் பாதியிலேயே விலகினார். அதன் பின், சிஎஸ்கேவை மகேந்திர சிங் தோனி தலைவராக வழிநடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## டெஸ்டில் அதிக சிக்ஸர்கள்

# சேவாக் சாதனையை முறியடித்த ரிஷப் பண்ட்



இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் கடந்த வெள்ளிக் கிழமை ஆரம்பமாகியது. முதலில் விளையாடிய தென்னாபிரிக்கா அணி 55 ஓவர்களில் 159 ஓட்டங்களில் சுருண்டது.

முதல் இன்னிங்சை ஆடிய இந்தியா நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் 1 விக்கெட் இழப்பிற்கு 37 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. நேற்று 2 ஆவது நாள் ஆட்டம் ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து ஆடிய வாஷிங்டன் சுந்தர் 29 ஓட்டங்களிலும் கேஎல் ராகுல் 39 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் கில் கழுத்து வலி காரணமாக பாதியிலேயே வெளியேறினார்.

இதனையடுத்து ரிஷப் பண்ட், ஜடேஜா ஜோடி சேர்ந்து விளையாடி வருகின்றனர். இதில் ரிஷப் பண்ட் தனது பாணியில் அதிரடியாக விளையாடினார். அவர் 24 பந்தில் 27 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இதில் 2 பவுண்டரி 2 சிக்ஸர் அடங்கும்.

இரண்டு சிக்சர்கள் விளாசியதன் மூலம் முன்னாள் இந்திய வீரர் சேவாக்கின் 90 சிக்ஸர்கள் என்ற சாதனையை ரிஷப் பண்ட் 91 சிக்ஸர்கள் எடுத்து முறியடித்துள்ளார்.

இந்தியாவுக்காக டெஸ்ட் போட்டிகளில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர்களில் 88 சிக்ஸர்களுடன் மூன்றாவது இடத்தில் ரோஹித் சர்மாவும் 80 சிக்சர்களுடன் நான்காவது இடத்தில் ரவீந்திர ஜடேஜாவும் 78 சிக்ஸர்களுடன் ஐந்தாவது இடத்தில் எம்.எஸ்.தோனியும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்மக்கழிவிலிருந்து மின்சாரம் உற்பத்தி
# கொரியாவிடம் உதவி கோரிய ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நீடித்து வரும் திண்மக் கழிவகற்றல் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் "கழிவிலிருந்து மின்சார உற்பத்தி" திட்டத்தை நிறுவுவதற்கான உதவியை இலங்கைக்கான கொரியக் குடியரசுத் தூதுவர் லீ மியோ னிடம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் முன்வைத்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில், கொரியத் தூதுவர் தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர்.

திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத் துக்கான திட்டம் ஒன்றை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், இதற்காக நிதி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு ஆகியவற்றுடன் கலந் துரையாடல்கள் நடைபெற்றுள்ளதாகவும் கொரியத் தூதுவர் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலும் இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படும் என்பதை ஆளுநர் வரவேற்றதோடு, மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவகற்றலில் எதிர்கொள்ளும் சவால்களையும் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுற்றுச்சூழல் சமநிலை மேம்பாட்டை நோக்கமாகக் கொண்ட மங்குரோவ் நடுகை ஊக்கு விப்பு திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தும் யோசனையையும் தூதுவர் முன்வைத்தார்.

மேலும், கொரியா வின் சர்வதேச சுகாதார அறக்கட்டளை ஊடாக இலங்கையில் 11 சுகாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அதனுள் வடக்கு மாகாணமும் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரியாவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட பச்சை வீட்டு விவசாயம் மற்றும் நுண்ணறிவு பாசன முறைகள் பற்றியும் ஆளுநர் கூறி, வடக்கு மாகாணத்தில் ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து இத்திட்டங்களைப் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்துவதற்கான ஒத்துழைப்பைத் தூதுவரிடம் கோரினார்.

வடக்கு மாகாண விவசாயிகள் கடின உழைப்பாளர்களாக இருந்தாலும், பாரம்பரிய முறைகளால் உற்பத்தி செலவு அதிகரித்து விளைச்சல் குறைந்து வருவதாக அவர் எடுத்துக் காட்டினார்.

இத்திட்டங்கள் அறிமுகமானால் குறை ந்த செலவில் அதிக உற்பத்தி பெற முடியும் என ஆளுநர் வலியுறுத்தினார். இதனைத் தூதுவர் சாதகமாக ஆராய்வதாகத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆளுநரின் செயலாளர் மற்றும் இணைப்புச் செயலாளர்கள் கலந்துகொண்டனர். (8)

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களை பதிவு செய்தல் -2026
## கரைச்சி பிரதேச சபை- கிளிநொச்சி

2026 ஆம் ஆண்டு சபைக்கு பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொகுதி (A) | பொருட்கள் |
|---|---|
| A-01 | காகிதாதி எழுதுபொருட்கள் |
| A-02 | அலுவலக உபகரணங்கள் (தளபாடம்) |
| A-03 | சித்த மருத்துவ மருந்துகள் |
| A-04 | நூலக நூல்கள் |
| A-05 | துணி வகைகள் |
| A-06 | கட்டட பொருட்கள் |
| A-07 | கல், மணல் |
| A-08 | தீந்தை வகைகள் |
| A-09 | நீர்க்குழாய் இணைப்புப் பொருட்கள் |
| A-10 | வாகன உதிரிப்பாகங்கள் |
| A-11 | மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள் |
| A-12 | எரிபொருட்கள் உராய்வு நீக்கிகள் |
| A-13 | இரும்பு பொருட்கள் |
| A-14 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள் |
| A-15 | பனைமரங்கள், சலாகைகள் |
| A-16 | வாகனங்களுக்கான ரயர், ரியூப், பில்டர்ஸ் மற்றும் மின்கலம் |
| A-17 | கணனி, அச்சுப்பொறி,பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல், Antivirus,செருகி மற்றும் இவற்றிற்கான உதிரிப்பாகம் |
| A-18 | சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A-19 | பாதணிகள், தோல் பொருட்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A-20 | அலங்காரப்பொருட்கள் |
| A-21 | இலத்திரனியல் பொருட்கள் |
| A-22 | மரக்கன்றுகள் (பழங்கள், நிழல்தரும் மரங்கள், பூங்கன்றுகள் முதலியன) |
| A-23 | சிற்றுண்டி மற்றும் உணவு வகைகள் |
| A-24 | கழிவகற்றும் கூடைகள் |

| தொகுதி (B) | சேவைகள் |
|---|---|
| B-01 | அச்சிடுதல், பதாதைகள் அமைத்தல் ,ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கட்டுதல் |
| B-02 | கனரக வாகனங்கள், மோட்டார் வாகனங்கள். உழவு இயந்திரங்கள் திருத்தல் |
| B-03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல்,ரயர் மாற்றுதல் |
| B-04 | ஒட்டு வேலைகள், உலோக வேலைகள் |
| B-05 | கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடுதல் |
| B-06 | மின்சாரத்திருத்தம் |
| B-07 | இலத்திரனியல் சாதனத்திருத்தம் |
| B-08 | வாகனங்கள் சுத்திகரிப்பு |
| B-09 | கோலவுடை தைத்தல் |
| B-10 | கணனி,பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| B-11 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B-12 | வீதி விளக்குகள் பொருத்துதல் |
| B-13 | மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டுதல் |
| B-14 | வீதி, கட்டடம் புனரமைப்பு, நிர்மான வேலைகள் |
| B-15 | கழிவகற்றல் சேவை (Gully Emptier Service) |

| தொகுதி (C) | ஒப்பந்த வேலைகள் |
|---|---|
| C-01 | குழாய்க்கிணறு அமைத்தல்/ குழாய்க்கிணறு சுத்தம் செய்தல் |
| C-02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C-03 | கட்டட நிர்மாணமும் திருத்தமும் |


பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக் கட்டணமாக ரூபா 1,000 (வரி நீங்கலாக) அறவிடப்படும்.

விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2026"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தவிசாளர், தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் 2025.12.18 வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவத்தினை அலுவலக நேரம் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணி வரை பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக விபரங்களுக்கு 021-228 5761/ 021-228 4400 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**தவிசாளர்,கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-4348)

## ஒன்பதாம் ஆண்டு
## நினைவஞ்சலி



மலர்வு 17 - 07 - 1968

உதிர்வு 27 - 11 - 2016

யாழ்.ஆதியாமலை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும்
சுவிட்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

### அமரர். சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)

திதி- 18.11.2025

உற்றார், உறவினர் உனை எண்ணி கண்ணீர் சிந்த
உயிர் பிரிந்த உடலோடு நிரந்தரமாய் உறங்கினாய்
எத்தனை உறவுகள் எம்முடன் இருந்தாலும்
ஏதோ ஒரு குறையாக உள்ளது உன் பிரிவு
மாண்டவர் மீண்டும் மண்ணில் பிறப்பெடுத்தால்
உன் உருவம் காண ஏங்கி நிற்கின்றோம்
காலம் முடிந்தது என்று காலனவன் காவிச் சென்றான்
கண்ணீரோடு கடவுளை வேண்டுகிறோம் ஆத்மா சாந்தியடைய. (1713)

தகவல் சுப்பிரமணியம் இராஜேஸ்வரி (சகோதரி)
ஆதியாமலை, உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கம்பத்திற்கு மேலே முறிந்து விழுந்தது மரம்

(அராலி)

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் மழையுடன் கூடிய கடும் காற்றினால் மரம் ஒன்று மின்கம்பத்திற்கு மேல் முறிந்து விழுந்துள்ளது.

இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்ததுடன் மின்சாரமும் தடைப்பட்டிருந்தது.



இந்நிலையில் விரைந்து செயற்பட்ட வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர், வீதிக்கு குறுக்காக முறிந்து விழுந்த மரத்தை வெட்டி போக்குவரத்தை சீர்படுத்தினர்.

அத்துடன் அராலி பகுதியில் வீடுகளுக்குள் புகுந்த வெள்ள நீரை வெளியேற்றும் பணியிலும் அந்த குழுவினர் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பொது இடம் ஒன்றில் தற்காலிகமாக தங்கவைக்கப்பட்டதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் சண்முகநாதன் ஜயந்தன் தெரிவித்துள்ளார். (8-104)

## நயினாதீவு படகு சேவையில் நேரமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நயினாதீவு - குறிகாட்டுவான் படகு சேவையின் இறுதி படகின் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தனியார் படகு உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நயினாதீவில் இருந்து இறுதி படகு சேவை மாலை 5 மணிக்கும், குறிகாட்டுவானில் இருந்து இறுதிப் படகு சேவை மாலை 5.30 மணிக்கும் இடம்பெறவுள்ளது.

அதேநேரம் வழமையான ஏனைய சேவை நேரங்களில் மாற்றம் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (8-33)

## உடைந்த நிலையில் நோயாளர் இருக்கைகள்



(கரணவாய்)

பருத்தித்துறை - மந்திகை வைத்தியசாலையில் நோயாளர் இருக்கைகள் உடைந்த நிலையில் காணப்படுவதாக நோயாளிகள், விசனம் வெளியிட்டுள்ளனர்.

பல நாட்களாக குறித்த இருக்கைகள் சரி செய்யப்படாமல் உடைந்த நிலையில் காணப்படுவதால் மருத்துவம் பெற வரும் நோயாளிகள் சிரமத்திற்குள்ளாவதை அவதானிக்க முடிகின்றது.

அதிகளவானோர் இருக்கைகள் இன்றி எழுந்து நின்று பல மணி நேரம் காத்திருந்து மருத்துவ தேவைகளை நிறைவேற்றிச் செல்வதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

எனவே பல நாட்களாக உடைந்த நிலையில் காணப்படும் மந்திகை வைத்திய சாலையின் நோயாளர் இருக்கைகளை சீர் செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-60)

## வீட்டிற்குள் புகுந்த வெங்கிணாந்தி!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் விளாத்திகுளம் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றிற்குள் வெங்கிணாந்தி பாம்பு ஒன்று புகுந்த சம்பவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து வீட்டின் உரிமையாளர் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் கொடுத்துள்ளார்.

இந் நிலையில் குறித்த பகுதிக்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர் குறித்த வீட்டிற்கு சென்று பாம்பினை பிடித்துள்ளார்கள்.

8 அடி நீளம் கொண்ட குறித்த பாம்பினை பிடித்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அதனை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வவுனிக்குளம் சரணாலயத்தில் ஒப்படைத்துள்ளனர். (8)

## சிறுப்பிட்டி நாகதம்பிரான் ஆலயத்தில் திருவிளையாடல் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சைவ வாழ்வியலில் திருவிளையாடல் புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடாத்தும் வாராந்தத் திருவிளையாடல் புராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 32, எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடை பெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலை நிகழ்வும் , சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ. த. குமரனின் "வரகுணனுக்குச் சிவலோகங்காட்டிய படலம் " என்னும் சொற்பொழிவும், இடம்பெறும்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (8)

## கசிப்பு வியாபாரி கைது!

(கரணவாய்)

பல வருடங்களாக கசிப்பு தொழிலை மேற்கொண்டு வந்த வெற்றிலைக் கேணி பகுதியை சேர்ந்த கசிப்பு வியாபாரி ஒருவர் மருதங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிலைக்கேணி சுடலை அடி பகுதியில் மறைமுகமாக கசிப்பு வியாபாரம் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மருதங்கேணி பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கசிப்புடன் கைது செய்யப்பட்ட குறித்த நபர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8-60)

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மக்கள் கருத்து விரைவில்

### நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாத தடை சட்டத்துக்கு மாற்றீடாக கொண்டுவரப்படவுள்ள, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக விரைவில் மக்கள் கருத்து கோரப்படவுள்ளது.

நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்காரவினால் இந்த விடயம் நேற்று பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

நாட்டில் புதிய சட்டங்கள் மற்றும் சட்டங்களைத் திருத்துவது குறித்து விசேட நிபுணர்களின் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, தற்போது 14 விசேட நிபுணர்களின் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தல், சட்டத்தை உருவாக்குதல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்காக இந்த விசேட நிபுணர் குழுக்கள் செயற்படுகின்றன. அதற்கமைய, பயங்கரவாத தடைச் சட்டத்தைத் திருத்தம் செய்து புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைபு விசேட நிபுணர் குழுவினால் தன்னிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து வெகு விரைவில் மக்கள் கருத்து கோரப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (நி)

## மகளிர் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்ய சாயி பாபா அவர்களின் 100 ஆவது அவதார தினத்தை முன்னிட்டு சத்ய சாயி சேவா நிலைய மகளிர் அணியினரால் "மகளிர் தின நிகழ்வுகள்" நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பித்து 12.45 மணிவரை யாழ்ப்பாணம் சத்ய சாயி சேவா நிலையத்தில் கொண்டாடப்படவுள்ளது. (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 160 | 90 |
| உருளைக்கிழங்கு | 210 | 180 | 240 | -- | 250 |
| பச்சைமிளகாய் | 300 | 250 | 250 | 250 | 200 |
| தக்காளி | 200 | 180 | 200 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 200 | 120 | 200 | 70 |
| கோவா | 180 | 200 | 300 | 200 | 130 |
| கரட் | 250 | 300 | 300 | 160 | 160 |
| பூசணி | 80 | 50 | 80 | 80 | 40 |
| புடோல் | 300 | 120 | 240 | -- | -- |
| வாழைக்காய் | 80 | 50 | 160 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 200 | 400 | 220 | 230 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 200 | 180 | 160 |
| பாகற்காய் | 700 | 400 | 1000 | 600 | 450 |
| வெண்டக்காய் | 200 | 120 | 200 | 150 | 110 |
| கருணைக் கிழங்கு | 150 | 200 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 250 | 350 | 250 |
| லீக்ஸ் | 220 | 250 | 250 | 160 | 130 |
| பீற்றூட் | 200 | 120 | 250 | 150 | 120 |
| கறிமிளகாய் | 850 | 600 | 500 | 650 | 500 |
| முருங்கைக்காய் | 600 | 400 | 500 | 600 | 200 |
| போஞ்சி | 500 | 400 | 600 | 350 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 160 | -- | -- |
| கீரை - 1 பிடி | 60-120 | 80 | 150 | -- | -- |
| தேசிக்காய் | 1600 | 1000 | 800 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 200 | 160 | 150-200 | -- | 150 |
| இராசவள்ளி | 800 | 500 | 800 | -- | 750 |
| வெங்காயப்பூ | - | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 180 | 150 | 300 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 70 | 100 | 60 | -- | 35 |
| வல்லாரை | 50 | 50 | 80 | -- | 40 |
| ஈரப்பலா | 100-150 | 120 | 200 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட ஊடகக் கற்கைகள் துறை மாணவன் புங்குடுதீவு டயான் எழுதிய இரண்டாவது கவிதை நூலான "ஆழ் மனதின் மீள் நினைவுகள்" கவிதை நூல் வெளியீட்டு விழாவானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கடந்த 15 ஆம் திகதி சனிக்கிழமை கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் தலைவர் செல்வன் ர.கஜேந்திரன் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படம்:சிவசாந்தன்)



மாவீரர் நாளை முன்னிட்டு வல்வெட்டித்துறை - தீருவில் சதுக்கத்தில் சிரமதானப் பணிகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன. (படம்:மகாலிங்கம்)




யாழ்ப்பாணம் வடமராட்சி வல்வெட்டித்துறை இரத்ததான சங்கம் நடாத்திய இரத்ததான முகாம் வல்வெட்டித்துறை நெடியாகடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தனர். (படம்: மகாலிங்கம்)





மாவீரர் பெற்றோர் மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தின் புன்னை நீராவி கிராம அலுவலர் பிரிவில் பணிக்குழுவின் ஒழுங்குபடுத்தலில் முன்னெடுக்கப்பட்டது. (படங்கள்: தேவானந்தன்)





யாழ் பல்கலைக்கழக சேர் பொன் இராமநாதன் காண்பிய மற்றும் ஆற்றுகை கலைகள் பீடத்தின் இரண்டாவது சர்வதேச ஆய்வு மாநாடு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை நடைபெற்றது.

"தமிழர் கலைகள் மரபும் மாற்றமும்" என்ற தலைப்பில் நடைபெற்ற இவ்விரு நாள் மாநாடு இந்தோ-இலங்கை அறக்கட்டளையின் ஆதரவுடன் நடைபெற்றது இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா, சேர் பொன் இராமநாதன் காண்பிய மற்றும் ஆற்றுகை கலைகள் பீட பீடாதிபதி த.றொபேட் அருட்சேகரன்,யாழ் இந்திய துணைத் தூதர் சாய் முரளி உள்ளிட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கலைத்துறை சார்ந்தோர் என பலரும் கலந்துகொண்டனர். (படம்:சிவசாந்தன்)



முல்லைத்தீவு களிக்காடு மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான ஏற்பாடுகள் களிக்காடு மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினால் நேற்று முன்தினம் மாவீரர்களுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (படம்: சதீஸ்)



இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பொதுமண்டபத்தில் நகரசபை தவிசாளரின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது. (படம்: மகாலிங்கம்)



வடமராட்சி கந்தபுராண கழகம் நடாத்திய இரண்டாவது கந்தபுராண விழா வடமராட்சி வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அதன் தலைவர் நாகப்பட்டினம் சோதிநாதன் தலைமையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (படம்: மகாலிங்கம்)



பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் யாழ் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெண்களுக்கான கலாசார நிகழ்வும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் வடமராட்சி கிழக்கு கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்: கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## மெக்சிகோவில் வலுக்கும் போராட்டம் ஆயிரக்கணக்கானோர் வீதியில்



(மெக்சிகோ)

மெக்சிகோவில் அதிகரித்துவரும் குற்றங்கள், தண்டனை இன்மை மற்றும் ஊழலை எதிர்த்து நாடு முழுவதும் பல ஆயிரக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

ஜெனரல் இசட் தலைமுறையைச் சேர்ந்தவர்களால் இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் அதில் பங்கேற்றுள்ளதாகவும் ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், பல்வேறு வயதுடையவர்கள் போராட்டங்களில் பங்கேற்று, ஜனாதிபதி கிளாடியா ஷீன்பாம் வசிக்கும் மெக்சிகோ நகரில் உள்ள தேசிய அரண்மனையைச் சுற்றியுள்ள வேலிகளை உடைத்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

நிலைமையைக் கட்டுப்படுத்த நாட்டில் உள்ள பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகள் மற்றும் கலகத் தடுப்பு பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவத்தில் 40 பேர் உட்பட 100 பொலிஸ் அதிகாரிகள் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், 20 பொதுமக்களும் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சமத்துவமின்மை, ஜனநாயகப் பின்னடைவு மற்றும் ஊழலுக்கு எதிராக இந்த ஆண்டின் தொடக்கத்தில் பல்வேறு நாடுகளில் ஜென் Z ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)

# வெனிசுலா மீது இரா... தயாராகும் அ...

**(வோஷிங்டன்)**

**“ஒபரேசன் சதர்ன் ஸ்பியர்” என்ற பெயரில் 12இற்கும் மேற்பட்ட போர்க் கப்பல்களையும் 15 ஆயிரம் துருப்புகளையும் கரீபியன் கடற்பகுதியில் அமெரிக்க இராணுவம் குவித்துள்ளதால் வெனிசுலா மீது இராணுவ நடவடிக்கை எடுக்கலாம் என்று தகவல் வெளியாகி இருக்கிறது.**

இதையடுத்து சிறப்பு அவசர நிலையை வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் அறிவித்து நிலம், கடல், வான்வெளியில் பாதுகாப்பைப் பலப்படுத்த உத்தரவிட்டுள்ளார்.

இதனால் அந்த பிராந்தியத்தில் பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில் ட்ரம்ப் கூறும்போது, வெனிசுலா மீது இராணுவ நடவடிக்கை தொடர்பாக நான் ஒரு முடிவு எடுத்து விட்டேன்.

அது என்னவென்று இப்போது என்னால் சொல்ல முடியாது.

அதுபற்றி விரைவில் சொல்வேன் என்றார்.

இதனால் வெனிசுலா மீது இராணுவ நடவடிக்கை எடுக்க அமெரிக்கா தயாராகி வருவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவுக்கும் வெனி

## 18 வயது நிரம்பியவர்களுக்கு கட்டாய இராணுவ சேவை

### ஜேர்மனி அரசு முடிவு

(பேர்லின்)

நேட்டோ கூட்டணி நாடுகள் மீது ரஷ்யா தாக்குதல் நடத்த நேரிடும் என ஜேர்மனி இராணுவ தலைவர் கார்ஸ்டன் ப்ரூயர் எச்சரிக்கை விடுத்தார்.

இதனால் வலிமையான இராணுவத்தை உருவாக்க ஜேர்மனி அரசாங்கம் முடிவு செய்தது.

இதற்காக கட்டாய இராணுவ சேவை திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்த உள்ளது. அதன்படி, 18 வயது நிரம்பிய அனைவரும் இராணுவத்தில் சேர்வதற்கான தகுதியை மதிப்பிடுவதற்கு மருத்துவ பரிசோதனையை எடுக்க வேண்டும்.

இந்த இராணுவ சேவையானது ஆண்களுக்கு கட்டாயமாகவும், பெண்களுக்கு விருப்ப அடிப்படையிலும் இருக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.




இது தொடர்பான மசோதா இந்த ஆண்டு இறுதிக்குள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என கூறப்படுகிறது.

இதன்மூலம் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை 2 இலட்சத்து 60 ஆயிரமாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அதேசமயம் இடதுசாரி கட்சியினர் இந்த கட்டாய இராணுவ சேவைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (நி)


## கொங்கோவி... ....பயங்க...


### 32 பேர் உ...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ராணுவ நடவடிக்கை; ...அமெரிக்கா!





ன்
து
க
க
தி
ரி

சுலாவுக்கும் இடையே நீண்ட காலமாக மோதல் போக்கு இருந்து வருகிறது.

இதற்கிடையே வெனிசுலாவில் இருந்து கடல் வழியாக அமெரிக்காவுக்குள் போதைப் பொருட்களைக் கடத்தி வருவதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார்.


இதையடுத்து பசுபிக் மற்றும் கரீபியன் கடல் பகுதிகளில், சந்தேகத்துக்குரிய படகுகள் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது.

ட்ரம்ப்பின் இந்தக் குற்றச்சாட்டை வெனிசுலா ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ திட்டவட்டமாக மறுத்து வருகிறார்.

இதற்கிடையே அமெரிக்கா சமீபகாலமாக கரீபியன் கடற்பகுதியில் போர்க்கப்பல்கள், போர் விமானங்களைக் குவித்து வருகிறது. (நி)

## ...வில் உள்ள சுரங்கத்தில் ...பகர நிலச்சரிவு....

## ...உயிரிழப்பு



(கொங்கோ)

ஆப்பிரிக்க நாடான கொங்கோ நாட்டில் உள்ள கலண்டோ செம்பு சுரங்கத்தின் சுற்றுச்சுவர் திடீரென இடிந்து விழுந்ததில் 32 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

சுற்றுச்சுவர் திடீரென இடிந்து போது பீதியடைந்த சுரங்கத் தொழிலாளர்கள் ஓடியபோது ஒருவர் மீது ஒருவர் விழுந்ததால் இறப்பு எண்ணிக்கை அதி கரித்ததாக கூறப்படுகிறது.

32 பேர் இறந்ததாக கூறப்பட்டாலும் உண்மையான இறப்பு எண்ணிக்கை 40 ஐ தாண்டக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

மின்சார வாகனங்கள் மற்றும் பிற பொருட்களுக்கான லித்தியம் - அயன் பேட்டரிகளை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் கோபால்ட் கனிமத்தை சுரங்கங்களில் இருந்து அதிக அளவில் காங்கோ உற்பத்தி செய்கிறது.

ஆனால் இந்தக' கனிம உற்பத்தியில் 80 சதவீதத்தை சீன நிறுவனங்கள் கட்டுப்படுத்துகின்றன [illegible] தது. (நி)

# இந்தோனேசியாவில் மண்சரிவு!

✔ 11 பேர் பலி
✔ 12 பேர் மாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவின், மத்திய ஜாவாவில் கடும் மழைவீழ்ச்சியால் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி 11 பேர் உயிரிழந்துள்ளதாக இந்தோனேசிய அனர்த்த முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணியாளர்கள் காணாமல் போன 12 பேரைத் தேடி வருகிறார்கள்.


கடந்த வியாழக்கிழமை சிலாகாப் நகரில் ஏற்பட்ட மண்சரிவில் சிபியூனிங் கிராமத்தில் பல வீடுகள் மண்ணுக்குள் புதைந்துள்ளன.

10 - 25 அடி ஆழத்தில் மக்கள் புதைந்திருந்ததால் மீட்புப் பணி சவாலாக மாறியுள்ளது.

11 பேர் உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் காணாமல் போயுள்ளனர் என இந்தோனேசிய அனர்த்த முகாமைத்துவ நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் அப்துல் முஹாரி ராய்ட்டர்ஸிடம் தெரிவித்தார்.

தென்கிழக்கு ஆசிய நாட்டில் மழைக்காலம் செப்ரெம்பர் மாதம் ஆரம்பித்து ஏப்ரல் மாதம் வரை நீடிப்பதால் வெள்ளப்பெருக்கு மற்றும் அதிகளவான மழை பெய்யும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் மத்திய ஜாவா நகரமான பெக்கலோங்கனில் பெய்த மழையால் ஏற்பட்ட மற்றொரு மண்சரிவில் சிக்கி சுமார் 25 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்திற்கு எதிராக ஒன்றுகூடுமாறு நாமல் அழைப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக அனைத்துக் கட்சிகளும் 21 ஆம் திகதி நுகேகொடைக்கு வந்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் இன்று, விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. உருளைக்கிழங்கு, பூசணி மற்றும் வெங்காய விவசாயிகளுக்கு செய்யப்பட்ட அநீதிக்கு அந்த மக்கள் அரசாங்கத்தை வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறார்கள்.

அரசாங்கம் பட்டதாரிகளுக்கு மிகப்பெரிய அநீதியைச் செய்துள்ளது. இந்த நாட்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை.

போதைப்பொருளுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு நிபந்தனையற்ற வகையில் நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம்.

பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர் சம்பத் மனம்பேரி போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டபோது அவரை கட்சியில் இருந்து உடனடியாக நீக்கினோம்.

தற்போது தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரின் கணவர் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

ஆனால் கட்சி மட்டத்தில் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் 50 சதவீத மேனும் நிறைவேற்றப்படவில்லை. கடந்த கால வரவு - செலவுத் திட்டங்களில் செல்வந்தர்களிடமிருந்து பெற்று, ஏழைகளுக்கு நிவாரணமளிக்கப்பட்டது.

ஆனால் இந்த வரவு - செலவுத் திட்டம் ஏழைகளிடமிருந்து பெற்று செல்வந்தர்களுக்கு வழங்கும் போக்கில் காணப்படுகிறது எனத் தெரிவித்தார். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 27 3/4
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L, Super Market
எதிர்பார்ப்பு : தகுதியான பெண்
தொ.இ: B/16201

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 20 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: A/L, PVT WORK
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16202

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 17
உயரம்:5'2"
தகைமை/தொழில்: IT Degree, Engineer(London)
எதிர்பார்ப்பு:சைவபோசனம், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16203

பிறப்பு :1985 இந்து
நட்சத்திரம்: சித்திரை
1 இல் செவ்
கி.பா: 91
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L, France
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், விவாகரத்தானவர்கள்
தொ.இ: B/16205

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 42
உயரம்:5'5"
தகைமை/தொழில்- O/L, Driver (Own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16206

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம்
8 இல் செவ்
கி.பா: 38 3/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSC, AAT, MBA, Accountant
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16204

பிறப்பு: 2002 இந்து
நட்சத்திரம்:உத்தரம்
8 இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BSC, MSC, Labwork (London)
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ: G/16207

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 38
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: College, BSc, Teacher
எதிர்பார்ப்பு : தகுதியான ஆண்
தொ.இ: G/16208

பிறப்பு : 1998 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
2 இல் செவ்
கி.பா: 57
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L,Cashier
எதிர்பார்ப்பு : வெளிநாடு
தொ.இ: G/16212

பிறப்பு: 1999 இந்து
நட்சத்திரம்: ரேவதி
2 இல் செவ்
கி.பா:18
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSC, Engineer
எதிர்பார்ப்பு : தகுதியான ஆண்
தொ.இ: G/16213

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 486



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## மனம் ஒரு குரங்கு

ஒரு சந்நியாசி இருந்தார். அவரிடம் போய் ஒருவர். "சுவாமி! உங்களுக்கு என்ன வேண்டுமோ கேளுங்கள். உங்களுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்!" என்றார்.

சந்நியாசி நிமிர்ந்து பார்த்தார். "எதையும் செய்யத் தயாராக இருக்கிறாயா?" என்றார். ஆமாம்!" என்றார் அவர்.

"வாக்கு கொடுத்ததற்கு அப்புறம் தயங்கக்கூடாது" என்றார் "தயங்கமாட்டேன்!" என்றார். அப்படி என்றால் உன் குடும்பம், சொத்து, வீடு வாசல் எல்லாவற்றையும் உதறிவிட்டு நாளைக்கு என்கூடவே வந்துவிடு!" என்றார். அந்த ஆள் திகைத்துப் போய்விட்டார். "சுவாமி அந்த அளவுக்கு என் மனது இன்னும் பக்குவம் அடையவில்லை! நான் இப்போது நடத்திக்கொண்டிருக்கின்ற வியாபாரத்தை ஏற்கும் அளவுக்கு என் மகனும் இன்னும் பக்குவம் அடையவில்லை. அப்படி இருக்கும் போது!" என்று இழுத்தார்.

அப்போது அந்த சந்நியாசி ஒரு கதை சொல்கிறார். அந்தக் கதை இதுதான்.

ஒரு குரங்கு. ஒரு சபையிலே ஓரமாக உட்கார்ந்து ஒரு உபதேசத்தைக் கேட்டது. உடனே அதற்குத் தான் பக்குவம் அடைந்து விட்டதாகத் தோன்றியது. தோட்டத்திற்குப் போய் ஒரு பாறை மேலே உட்கார்ந்து ஒருநாள் முழுவதும் ஜெபம் செய்வோம் என்று தீர்மானம் செய்தது. அதே மாதிரி போய் உட்கார்ந்து ஜெபம் செய்ய ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்திலே அதன் மனதுக்குள்ளே ஒரு சந்தேகம் வந்தது.

ஒரு வேளை நான் இப்படியே பட்டினி கிடந்துவிட்டேன் என்றால் நான் எனக்கு வேண்டிய இரையைத் தேட வெளியே போய் மரத்திற்கு மரம் தாவ முடியாமல் போய்விடுமோ என்கிற சந்தேகம்.

அதனாலே தொடர்ந்து ஜெபம் செய்ய முடியவில்லை! உடனே என்ன செய்தது. ஓடிப்போய் ஒருமரத்திலே இருந்து பழங்களையெல்லாம் பறித்துக்கொண்டு வந்தது. ஒரு மூலையிலே அதையெல்லாம் தயாராக வைத்துவிட்டு ஜெபம் செய்ய ஆரம்பித்தது.

கொஞ்ச நேரம் ஆனது! மறுபடியும் மனதிலே ஒரு வேளை பட்டினியாலே என் உடம்பு ரொம்பவும் பலவீனம் அடைந்து மூலையிலே இருக்கின்ற அந்தப் பழங்களை எழுந்து நடந்துபோய் எடுத்துச் சாப்பிட முடியாமல் போய்விட்டது என்றால் என்ன செய்வது. அப்படி ஆகிவிட்டது என்றால் அந்தப் பழங்களை பார்த்தே ஏங்கிப் போய் செத்துப்போவதுபோல ஆகிவிடுமோ என்ற நினைப்பு வந்தது.

பயமாய்ப் போனது, அழுகை வந்துவிட்டது. உடனே என்ன செய்தது. எழுந்து ஓடிப்போய் அந்தப் பழங்களையெல்லாம் அள்ளிக் கொண்டு வந்து காலடியிலே வைத்துக் கொண்டது. மறுபடியும் ஜெபம் செய்ய ஆரம்பித்தது! கொஞ்ச நேரம் ஆனது. மறுபடியும் மனதுக்குள்ளே ஒரு சந்தேகம். ஒருநாள்பட்டினிக்கு பிறகு ஒரு வேளை நம்மாலே கையை நீட்டி பழங்களை எடுக்கின்ற அளவுக்கு பலம் இல்லாமல் போய் விட்டது என்றால் என்ன செய்வது? உடனே தன்னை அறியாமல் ஒரு பழத்தை வாயிலே போட்டுக் கொண்டது. இப்படி வாய்க்குள்ளே பழம் இருந்ததினாலே வாயை அசைத்து ஜெபம் செய்ய முடியவில்லை! மனதும் அந்தப் பழத்தின் ருசியிலே ஈடுபட ஆரம்பித்துவிட்டது! அந்தப் பழத்தை சாப்பிட்டு முடித்ததும் அந்த குரங்கு நினைத்துப் பார்த்தது.

"எப்படியும் நாளைக்கு இந்தப் பழங்களை நான்தானே சாப்பிடப் போகிறேன். அதை இப்போதே சாப்பிட்டுவிட்டால் என்ன? பட்டினியோடுதான் ஜெபம் செய்யவேண்டும் என்று சட்டமா என்ன?"

இப்படி நினைத்துக்கொண்டே அந்த குரங்கு எல்லா பழங்களையும் எடுத்துச் சாப்பிட ஆரம்பித்துவிட்டது. வயிறு நிறைந்தது. ஜெபம் செய்கிற எண்ணம் மறைந்து போனது!. அங்கேயே படுத்துத் தூங்க ஆரம்பித்துவிட்டது. இதுதான் அந்த சந்நியாசி சொன்ன கதை!

அதனாலே மனதை கண்ட்ரோல் செய்வது சுலபமான விடயமில்லை! அது ரொம்ப கஷ்டம். மனம் ஒரு குரங்கு மாதிரி என்று சொல்வது எதற்கு என்றால் இது இரண்டையுமே அடக்குவது சிரமமான காரியம்!

ஒருவர் அப்படித்தான் ரொம்பப் பிரியமாக ஒரு குரங்கை வளர்த்தார். அதை முறைத்துப் பார்ப்பார். அந்தப் பார்வையைப் பார்த்தே அது அடங்கிப் போய்விடும். அப்படி ஒரு பயிற்சி.

ஒருநாள் அவர் வீட்டுக்குப் போய் இருந்தேன். நடுக்கூடத்துலே. எதிரும் புதிருமாக அவர்கள் இரண்டு பேரும் உட்கார்ந்திருந்தார்கள்.

இவர் அந்தக் குரங்கையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார். அந்த குரங்கு இவரையே முறைத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறது!

இரண்டு பேருக்கும் நடுவிலே ஒரு வாழைப்பழம்!

அந்த வாழைப்பழத்தை பார்வையாலேயே குரங்கை எடுக்கவிடாமல் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார். நான் அவர் காதோரமாய்ப் போய் "என்ன பழத்தை எடுக்கமுடியாத அளவுக்கு அந்தக் குரங்கைப் பார்வையாலேயே கட்டுப்படுத்துறீர்கள் போல இருக்கே!" என்றேன்.

அவர் பார்வையைத் திருப்பாமலே பதில் சொன்னார்.

"அப்படி இல்லை. இப்போது அந்த குரங்குதான், என்னை கண்ட்ரோல் செய்து கொண்டிருக்கிறது. பழத்தைத் தொட்டேன் என்றால் பாய்ந்து என் மேலே விழுந்து குதறிவிடும். எப்படி அந்த பழத்தை எடுப்பது என்று யோசனை செய்துகொண்டிருக்கிறேன்!" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 07)

## வீட்டின் அத்திவாரத்தின் (அடித்தளத்தின்) முக்கிய அடிப்படைகள்

## The Important Basic of Foundation for a House




அத்திவாரம் மிகமுக்கியம் வாய்ந்தது. அத்திவாரம் பிழைத்தால் எல்லாம் பிழைத்துவிடும் என்று கூறுவதுண்டு. வாழ்க்கைக்கும் சரி வீட்டுக்கும் சரி அத்திவாரம் என்பது சரியாக அமைய வேண்டும் ஒரு வீட்டின் கட்டுமானத்தில் அடித்தளம் மிகவும் முக்கியமான பகுதியாகும். இது ஒரு கட்டடத்தினையும் தாங்கும் தளமாக செயற்படுகின்றது.

ஒரு வலுவலாக வடிவமைக்கப்பட்ட அடித்தளம் இன்றி எந்தவொரு அழகான கட்டடமும் பாதுகாப்பாகவும் இருக்க முடியாது. வீட்டின் அடித்தளத்தினை தீர்மானிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்களாவன.

**1)நிலம் மற்றும் பகுப்பாய்வு** - Site and soil Analysis

கட்டுமானத்திற்கு முன்னரே நிலம் மற்றும் மண்ணின் தன்மை பற்றி முழுமையான ஆய்வு செய்திருத்தல் வேண்டும். பல்முகப்பட்ட மண்வகைகளானது களி (clay), மணல் (sand) மற்றும் பல எமது சூழலிலே அவதானிக்கமுடியும். இவை ஒவ்வொன்றும் கட்டடத்தின் அழுத்தத்திற்கு (loading and Pressure) ஒவ்வொரு விதமாக செயற்படக் கூடியவை.

மண்ணின் தன்மையானது அது பெறும் ஈரப்பதத்துடன் வித்தியாசமான முறையில் சில சுருங்கும், சில விரியும், சில இயங்கும் நிலைக்குச் செல்லும். இதனால் அடித்தளங்கள் இருக்கும் இடங்களை விட்டு விலகை நேரிடும். எனவே மண்ணின் தன்மை அறிந்து, ஏற்ற அடித்தள வகையை தேர்வு செய்வதென்பது பொறியியலாளர்களின் மிகவும் முக்கியமானதொரு கடமையாகும்.

**2)அடித்தள வகைகள்** - Type of Foundations

முக்கியமான அடித்தளத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

♦Shallow Foundation - ஆழம் குறைந்த அடித்தளம்

பாரம் குறைந்த (light load) சிறிய கட்டடங்களிற்கு மண் ஈடு கொடுக்கும் தன்மையை பொறுத்து இவற்றை அனுமதிக்க முடியும்.

♦Deep Foundation- ஆழம் கூடிய அடித்தளம்

மேற்படை மண்ணானது பலவீனமாகக் காணப்படும் போது, கட்டடத்தின் பாரத்தன்மையை அதனால் தாங்கிக் கொள்ளமுடியாது இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஆழமான சந்தர்ப்பங்களில் ஆழமான அடித்தளங்களானவை (Pile Foundation) போன்றவை பயன்படுத்த அனுமதிக்கப்படும். இவை நிலத்தின் ஆழத்திற்குச் சென்று வலுவான மண் / கற் பாறைகளிலே நிறுத்தப்பட்டு முழுக் கட்டடத்தினையும் தாங்கும் தன்மையை அறிந்து விடப்படும்.

**3) எடையைப் பகிர்ந்தளித்தல்** - Load Distribution

அடித்தளமானது எடையை சீராக நிலத்திற்கு பகிர்ந்தளிக்க கூடியதாக இருந்தால் மட்டும் கட்டடமானது இறங்குவதையோ அல்லது வெடிப்பு ஏற்படுவதையோ தவிர்க்க முடியும். கட்டடத்தின் எடையொன்றை பார்க்கும் போது கட்டடத்தின் இயல்பு நிலை எடை (Dead Load) கட்டடத்தினுள் இருப்போர் மற்றும் தளபாடங்கள் (live Load) மற்றும் வெளித்தளங்கள் ( Wind & Earthquak) என்ற அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

**4) ஈரப்பதன் மற்றும் வடிகால் கட்டுப்பாடு** (Moisture and Drainage control)

நீரானது அடித்தளத்தின் நிலையான அமைப்பிற்கு மிகவும் முக்கிய பாதிப்பு செலுத்தும் காரணியாக உள்ளது. சீரான வடிகாலமைப்பு (drainage system) மற்றும் கூரை நீர் வெளிச் செல்லும் வழிகளினை (gutter and Down pipe) நீரானது அடித்தளங்களிற்கு வெளி நோக்கி செல்லும் வகையில் முழு வடிகாலமைப்பினையும் வடிவமைப்பு செய்யப்படல் வேண்டும்.

சில நிலக்கீழ் சூழற்காரணிகளின் தாக்கம் அதிகமாக இருக்கும் சூழல்களில் நீரானது அடித்தளங்களை அனுகாதமுறையில் water proofing மற்றும் damp proofing இனை மேற்கொள்ளும் உரிய தொழில் முறை பயன்படுத்தப்படல் வேண்டும். இதன் தேவைப்பாடு மற்றும் முக்கியத்துவம் பற்றி பொறியியலாளரினால் தீர்மானிக்க முடியும்.

**5) கட்டுமானப் பொருட்கள்**

அடித்தளங்களின் கொங்கிறீட் (Concret) இற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்களின் (Cement, Reinforcement, sand metal) தரத்தன்மை மற்றும் உரிய முறையில் நடாத்தப்படும் கட்டுமானப் பணி அடித்தளத்தின் வலுவிற்கும் நிலைபேறான தன்மைக்கும் மிகவும் முக்கியமாக பொறியியலாளரால் கண்காணிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

**6)கட்டுமான விதிமுறைகள்** (Building codes and standard )

ஒவ்வொரு கட்டடமும் அமைந்திருக்கும் உள்ளூர் கட்டுமான விதிமுறைகளுக்கேற்ப அமைக்கப்படல் வேண்டும். இதன்போது சுற்றாடல் பாதுகாப்புத் தன்மையும் கண்காணிக்கப்படல் வேண்டும்.

ஒரு வீட்டின் நிலையான தன்மையானது அதன் அடித்தளத்திலே தங்கியுள்ளது.

அதனால் சரியான திட்டமிடல், நில ஆய்வு மற்றும் தரமான கட்டுமானம் ஆகியவை வீட்டு அடித்தளத்தை பாதுகாக்கும் வலுவான அடித்தளத்திற்காக முதலிடுவது உங்கள் கனவு இல்லத்தின் பாதுகாப்பிற்கும் நீடித்த வாழ்விற்கும் ஆணிவேராக அமையும்.

(தொடரும்)

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,
வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

18.11.2025
கார்த்திகை 02, செவ்வாய்க்கிழமை
திரியோதசி முற்பகல் 8.12 மணிவரை
சித்திரை காலை 6.39 மணிவரை
சுப நேரம் 10.38-12.08 மணிவரை
இராகுகாலம் 3.08-4.38 மணிவரை

சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி

**வளவன்**




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், வாகன சுகமுண்டு, தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், நணபர்கள் சந்திப்புண்டு.




தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செலவிற்கேற்ப வருமானம் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.




உடல் நலன் சீராகும், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம்.




செல்வாக்கு மேலோங்கும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கலாம், உறவினர்களின் சந்திப்புண்டு, சுப விரயங்கள் கூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மேன்மையடைய வேண்டிய நாள்.




வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.




உடல் நலன் சீராகும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் புகழ் கூடும்.




குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ்விப்பதில் உள்ளது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 912





"ஆகா! நீ கூட அவ்விதம் நம்புகிறாயா? குந்தவை ஒரு வேளை அவ்வாறு உன்னிடம் சொன்னாளா?"

"நானே கண்ணால் பார்த்ததைத்தான் சொல்கிறேன், குந்தவையும் அப்போது குழந்தை அல்லவா? அவளுக்கு என்ன தெரிந்திருக்க முடியும்? அருள்மொழியைக் காப்பாற்றியது மட்டும் அல்ல, சோழ நாட்டுக்குத் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொடுத்த தெய்வமும் இவர்தானே! தாங்கள் பூதத் தீவில் காட்டுக் கரடிக்கு இரையாகாமல் காப்பாற்றிய தெய்வம் அல்லவா?" "கடவுளே! அதுகூட உனக்குத் தெரியுமா? இவள் இத்தனை நாள் உயிரோடு இருந்து வருகிறாள் என்பதும் தெரியுமா?"

"சில காலமாகத் தெரியும். தெரிந்தது முதல் இத்தேவியை ஈழ நாட்டிலிருந்து அழைத்து வரும்படி முதன் மந்திரியிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்"

"அநிருத்தரே! இது என்ன மகாராணி சொல்லுவது? இவள் உண்மையிலேயே அந்தக் கரையர் மகள்தானா? இவள் உயிரோடு தானிருக்கிறாளா? இவள் இறந்துவிட்டாள் என்பது பொய்யா? இவள் ஆவி என்னை வந்து சுற்றுகிறதென்று நான் எண்ணியதெல்லாம் பிரமையா? ஏற்கெனவே என் அறிவு குழம்பியிருக்கிறது. எல்லாருமாகச் சேர்ந்து என்னை முழுப் பைத்தியமாக்கி விடா தீர்கள்?" என்றார் சக்கரவர்த்தி சுந்தர சோழர்.

"பிரபு! இவர் கரையர் மகள் என்பது உண்மைதான். இவர் இறக்கவில்லை என்பதும் உண்மைதான். சக்கரவர்த்தி! நான் பெரிய குற்றவாளி. நான் செய்த குற்றத்துக்கு மன்னிப்பே இல்லை ஆனாலும் தங்கள் கருணையினால்"

"முதன்மந்திரி! இப்போது தெரிகிறது, கோடிக்கரையிலிருந்து நீர் பலவந்தமாகப் பிடித்துக் கொண்டு வரச் சென்னவள் இவள் தான்! பல்லக்கில் வந்தவள் அந்த ஓடக்காரப் பெண் என்று நீர் கூறியது உண்மையல்ல!" "மன்னர் மன்னா! அடியேனை மன்னிக்க வேண்டும்!"

"ஆகா! மன்னிக்க வேண்டுமாம்! சக்கரவர்த்தி என்றும், மன்னர் மன்னன் என்றும் கூறப்பட்ட ஒருவன் என்னைப் போல் ஏமாற்றப் பட்டது இந்த உலகம் தோன்றிய காலத்திலிருந்து நேர்ந்திராது.

எனக்குத் தெரியா மல் ஏன் இந்தக் காரியத் தைச் செய்ய வேண்டும்? ஏன் முன்னாலேயே சொல்லியிருக்கக் கூடாது? இன்று சாயங்காலம் என்னுடன் அத்தனை நேரம் பேசிக்கொண்டிருந்தீர்களே? அப்போது கூட ஏன் சொல்லவில்லை? முதன்மந்திரி! எனக்கு எல்லாம் விளங்குகிறது. பழுவேட்டரையர்கள் சொல்லுவது சரிதான் நீங்கள் எல்லாருமாகச் சேர்ந்து எனக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிறீர்கள்!"

"நாங்கள் சூழ்ச்சி செய்தது என்னமோ உண்மைதான். ஆனால் தங்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்யவில்லை. எப்படியாவது கரையர் மகளைத் தங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்க வேண்டுமென்று எண்ணினோம். அவள் கடலில் விழுந்து இறந்தது பற்றித் தங்கள் மனம் மிக்க வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று மகாராணியின் மூலமாக அறிந்து நான் இந்த முடிவுக்கு வந்தேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## உண்மையான நண்பன்



ஒரு செல்வந்தர் வீட்டில் தெண்டன் என்பவன் காவலாளியாக வேலை பார்த்து வந்தான்.

தினமும் அவன் வீட்டுக்குத் திரும்பும் போது, மது அருந்தி வயிறு நிறையச் சாப்பிட்டு வருவான்.

அவன் மனைவி, "தினமும் இப்படிக் குடித்துவிட்டு, தின்னுவிட்டு வருகிறாயே? உன்னுடைய சம்பளம் இதற்கே போய் விட்டால், குடும்பத்தை எப்படி நடத்துவது?" என்று கடிந்து கொண்டான்.

அதற்கு தெண்டன், "நான் வேலை செய்யும் வீட்டில், சிங்கன், வீரன் என இருவர் தோட்ட வேலை பார்க்கின்றனர். அவர்கள் இருவரும் என்னிடம் மிகுந்த பிரியம் உடையவர்கள். சிங்கன் எனக்கு மதுவும், உணவும் அளிப்பான்.

வீரனோ தன் உயிரையே கொடுக்கக் கூடியவன்," என்று கூறினான்.

சில நாட்களுக்குப் பிறகு, தெண்டனும் அவன் மனைவியும் சிங்கன் வீட்டுக்குச் சென்றனர். அவர்களை அவன் அன்போடு வரவேற்று, உபசரித்து, விருந்து அளித்து, அனுப்பி வைத்தான்.

அதன் பிறகு, வீரன் வீட்டுக்குச் சென்றனர். அப்போது வீரனும் அவன் மனைவியும் சூதாட்டத்தில் கவனமாக இருந்தனர். என்றாலும், சிறிது நேரம் அன்போடு பேசி, உணவு அளிக்காமல், அனுப்பி வைத்தனர். தெண்டன் மனைவிக்கு அவர்கள் உணவு அளிக்காதது வருத்தம் தந்தது.

"வீரன் உயிரையே கொடுக்கக் கூடியவன் என்று புகழ்ந்தாயே! என்று ஆத்திரப்பட்டாள் மனைவி. தெண்டன் அவளை சமாதானப்படுத்தினான்.

சில மாதங்களுக்குப் பின், தெண்டனும் மனைவியும் ஆலோசித்து நட்பைச் சோதிக்கத் தீர்மானித்தனர்.

தெண்டன் மனைவி மட்டும் சிங்கன் வீட்டுக்குச் சென்று, கவலை தோய்ந்த முகத்தோடு, "கணவனை, செல்வந்தர் வேலையிலிருந்து நீக்கி விட்டார்" என்று கூறினாள்.

"பணக்காரனை நாம் என்ன கேட்க முடியும்? ஏன் விலக்கினீர்கள் என்று கேட்க நமக்கு என்ன உரிமை இருக்கிறது? பணக்கார வர்க்கத்தாரிடம் வேலை செய்வது தலைக்கு மேல் கத்தி தொங்குவது போன்றது. வேறு வேலை தேடிக் கொள்ளச் சொல்லு" என்று அவளிடம் கூறி, அவளை அனுப்பி வைத்தான் சிங்கன்.

அடுத்து, வீரன் வீட்டுக்குச் சென்று தன் கணவனை வேலையிலிருந்து நீக்கி விட்டதாக சொன்னாள் தெண்டன் மனைவி.

வீரன் மிகவும் கவலைப் பட்டு, "முதலாளி மற்றும் அவர் மனைவியிடம் மிகவும் பணிவோடு வேண்டி அவனுக்கு வேலை? மீண்டும் கிடைக்க முயற்சி எடுக்கிறேன், தைரியமாகப் போ, கவலை வேண்டாம்" என்று ஆறுதல் கூறி அனுப்பினான். அப்பொழுது தான் வீரனின் நட்பின் உயர்வை அறிந்து மகிழ்ந்தாள் தெண்டனின் மனைவி.

**உண்மையான நண்பன், ஆறுதல் கூறி ஆதரவு காட்டுவான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் இருக்கும் பண்புகள் தான் வெளியுலகில் எனக்குக் கிடைக்கும் மரியாதைக்கு ஆதாரம்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அறம் பிழைத்தால் மகிந்த அல்ல அநுரவுக்கும் அதே கதிதான்

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற சிலப்பதிகாரத் தத்துவத்தில் இருந்து எவரும் விலக முடியாது.

ஆம், ஆட்சியில் இருப்பவர்கள் அறத்தைப் பேணுவது அவர்களின் அரசியல் கடமையாகிறது. அதிலிருந்து மீறியவர்களை அறம் தண்டிக்கும்.

இதற்கு நம் நாட்டில் முன்பு ஆட்சி புரிந்தவர்களின் சமகால நிலைமை தக்க சான்றாகும்.

இருந்தும் அந்த உண்மையை உணர்ந்து கொள்வதில் இருக்கக்கூடிய இட்டல் இடைஞ்சல்கள் மீளவும் அரசியல் பிழையாகி விடுகிறது.

ஆம், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஓரளவுக்கு இன, மத பேதங்களைக் கடந்து இந்த நாட்டு மக்கள் என்ற உன்னதமான சிந்தனையோடு ஆட்சி செய்வதாக மக்கள் நம்புகின்றனர்.

இதனை உறுதி செய்வதுபோல, திருகோணமலை கடலோரத்தில் பௌத்த பிக்குகள் சேர்ந்து இரவோடு இரவாக பிரதிஷ்டை செய்த புத்தர் சிலையை அகற்றிய சம்பவம் அமைந்திருந்தது.

ஆம், திருகோணமலைக் கடலோரத்தில், எந்தவித அனுமதிகளுமின்றி சட்டவிரோதமாகப் புத்தர் சிலை நிறுவப்பட்டது.

இவ்வாறு சட்டவிரோதமாக நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றுவதில் பொலிஸார் காட்டிய தீவிரம் கண்டு மனம் நெகிழ்ந்து போனது.

ஓ! இதுவன்றோ நாடு. அநுர அரசின் நடுநிலைத் தன்மை எத்துணை சிறப்புடையது என்றெல்லாம் நாம் நினைத்தபோது, இல்லை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடமும் பௌத்த மதவாதம் மேலோங்கி உள்ளதென்பதை நிரூபிப்பதுபோல, திருகோணமலைக் கடற்கரையில் மீண்டும் அதே புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

ஆம், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால முன்னைய சரத் வீரசேகர போல தன்னை மாற்றிக் கொண்டு எந்தவித அனுமதிகளும் இல்லாமல்; நாங்கள் பௌத்த சிங்கள அரசாங்கம். இந்த நாடு பௌத்த சிங்கள நாடு என்பதாக புத்தர் சிலையை மீளவும் திருமலைக் கடலோரத்தில் பிரதிஷ்டை செய்துள்ளார்.

கூடவே, புத்தர் சிலையை அகற்றிய அதே பொலிஸார் மீளவும் புத்தர் சிலையை கொண்டு வந்து வைக்கின்றனர் எனில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கமும் பௌத்த பீடங்களுக்குக் கட்டுப்பட்டது என்ற உண்மை பட்டவர்த்தனமாக வெளிப்படுகிறது.

எதுஎவ்வாறாயினும் சட்டங்களை அரசாங்கம் மீறுமாக இருந்தால், அதுவே அரசியலின் பெரும் பிழையாகும் என்பதை அநுர அரசு புரிந்து கொண்டு, புத்தர் சிலையை அகற்றி அதைச் சட்டத்தினூடு அமுலாக்க முன்வர வேண்டும். அதுவே அறமாகும்.

# இனவாதம் பழுத்துப்போன பெரும்பான்மை அரசுகளின் பௌத்த மயமாக்கல் தொடர்கிறது

## திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பில் பாராளுமன்றில் ரவிகரன் எம்.பி

(கொழும்பு)

ஈழத்தமிழர்களின் பூர்வீக இடங்களிலெல்லாம் இனவாதம் பழுத்துப்போன பெரும்பான்மை அரசுகளால் அடாவடித்தனமாக பௌத்த மயமாக்கல் செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று (17) இடம்பெற்ற 2026ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நீதி அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

வென்றவன் பக்கமே வரலாறு சாயும் என்பதையும் வெல்பவன் சொல்வதே வரலாறாகும் என்பதையும் இனவாதம் பழுத்துப்போயுள்ள மாறி வரும் அரசுகளின் செயல்கள் காட்டுகின்றன.

முல்லைத்தீவில் குருந்தூர் மலை, நெடுங்கேணியில் வெடுக்குநாறி மலை, யாழ்ப்பாணத்தில் தையிட்டி, நேற்று முன்தினம் திருகோணமலையில் சிறி சம்புத்த ஜயந்தி போதிவர்த்தன விகாரை.

ஈழத்தமிழர்களின் பூர்வீக இடமெல்லாம் சட்டம் மௌனிக்க அரச இயந்திரங்கள் காவல் காக்க தமிழர்களை அடித்தும் அச்சுறுத்தியும் தடுத்தும் அறத்தைக் கொன்று விகாரைகள் எழும்புகின்றன.

பேரினவாத அடக்குமுறைக்குள் தமிழர்களுக்குக் கிட்டாத ஒன்றைப் பற்றிய விவாதத்திலே இன்று கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக்குள்ளாக்கப்படும் மக்களின் சார்பாக வடக்கு, கிழக்கில் இடம்பெறும் இத்தகைய நீதிக்குப் புறம்மான பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்தார். (ம-7)

## வடக்கு மாகாணத்தில் வியட்நாமியர்கள் முதலீடு செய்ய ஊக்குவிப்போம்

### வடக்கு ஆளுநரிடம் வியட்நாம் தூதுவர்

(யாழ்ப்பாணம்)

வியட்நாமைப் போல போரை எதிர்கொண்ட வடக்கு மாகாணம் எதிர்நோக்கும் சவால்களை நாங்கள் நன்கு புரிந்து கொள்ள முடியும் என்றும் வடக்கு மாகாணத்தில் வியட்நாமியர்கள் முதலீடு செய்வதற்கான ஊக்குவிப்புக்களை வழங்குவோம் என்றும் இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் ட்ரின் தி தாம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்த வியட்நாம் தூதுவர் தலைமையிலான குழுவினர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையிலான குழுவினரை நேற்றுத் திங்கட்கிழமை மாலை ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் கருத்துத் தெரிவித்த வியட்நாம் தூதுவர் ட்ரின் தி தாம், வியட்நாம் ஏற்றுமதி நோக்கிலான விவசாயத்தில் வலுவாகச் செயற்படுகிறது.

அந்த அனுபவங்களை வடக்குடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராகவுள்ளோம். ஏனைய தொழில்நுட்ப அனுபவங்களையும் பகிர முடியும்.

வடக்கு மாகாண அதிகாரிகளை வியட்நாமுக்கு அழைத்து எங்கள் அனுபவங்களைப் பகிரலாம். நீங்கள் முன்வைத்த முதலீட்டு வாய்ப்புக்களை வியட்நாமிய முதலீட்டாளர்களுக்குத் தெரிவிப்பேன்.

அவர்களை வடக்கில் முதலீடு செய்ய ஊக்குவிப்பேன். அதிக எண்ணிக்கையிலான வியட்நாமியர்கள் தற்போது இலங்கைக்குப் பயணம் செய்கின்றனர். வடக்கு மாகாணத்தின் சுற்றுலா மையங்களை அவர்களிடம் அறிமுகப்படுத்தி இங்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன் என்றார்.

அத்தோடு முதலீட்டாளர்கள் நேரத்தை மிச்சப்படுத்த விரும்புவார்கள்.

எனவே கொழும்பு - யாழ்ப்பாணம் இடையிலான உள்ளூர் விமான சேவை மேலும் வினைத்திறன் பெறுவது அவசியம். வியட்நாமின் மாநிலங்களுடன் வடக்கு மாகாணமும் நேரடி ஒத்துழைப்புக் கட்டமைப்புக்களை உருவாக்க விரும்புகிறோம் எனவும் குறிப்பிட்டார். (ம-7)

## பருத்தித்துறையில் கைதான 31 இந்திய மீனவர்களுக்கு

### 10 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறை

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட 31 தமிழகக் கடற்தொழிலாளர்களுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதித்துப் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பருத்தித்துறைக் கடற்பரப்பை அண்டிய பகுதிகளில் கடந்த சில வாரங்களுக்கு முன்பாக மூன்றுபடகுகளில் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூன்று படகோட்டிகள் உள்ளிட்ட 31 பேரைக் கடற்படையினர் கைது செய்து நீரியல்வளத்துறை அதிகாரிகள் ஊடாக பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை தம் மீதான குற்றச்சாட்டுகளைத் தமிழகக் கடற்தொழிலாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

அதனையடுத்து இலங்கைக் கடற்பரப்பினுள் படகினைச் செலுத்திய குற்றச்சாட்டு உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு படகோட்டிகள் மூவருக்கும் 19 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அதனை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்தது மன்று. அத்துடன் படகில் இருந்த 28 கடற்தொழிலாளர்களுக்கும் 18 மாத சிறைத் தண்டனை விதித்து அதனை 10 வருடங்களுக்கு மன்று ஒத்திவைத்தது.

அத்துடன் படகின் உரிமையாளர்களுக்கு படகு தொடர்பிலான வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் மே மாதம் மன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணையும் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33,60)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2025**

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்து கொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

நி.தி.பிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

02

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

பூட்டோ, ஒரு முஸ்லீம் அரசை தலைமை தாங்கி நடத்தி செல்ல தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார். அவர் பாகிஸ்தானின் பிரதம மந்திரியாக இருமுறை (1988-1990 1993-1996) பதவி வகித்தார். அவர் பாகிஸ்தானின் முதல் மற்றும் இன்று வரையிலும் ஒரே பெண் பிரதம மந்திரியாவார்.

அவர் தனது படிப்புக்களை முடித்து கொண்டு பாகிஸ்தானுக்கு திரும்பிய பூட்டோ, அவர் தந்தையின் சிறைவாசம் மற்றும் அதைத் தொடர்ந்து தூக்கிலிடப்பட்டது ஆகியவற்றால் விழிப்படைந்து தந்தையின் கட்சியான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் ஒரு தலைவரானார். 1988 நவம்பர் 16இல், நடந்த பொது தேர்தலில், பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி தேசிய நாடாளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையிலான இடங்களைக் கைப்பற்றியது.பூட்டோ டிசம்பர் 2 ஆம் திகதி, 35 வயதில் இளம் நபராகவும், முதல் பெண்மணியாகவும் நவீன காலத்தில் ஒரு முஸ்லீம் பெரும்பான்மை கொண்ட அரசை தலைமையேற்று நடத்த ஒரு கூட்டணி அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக பதவியேற்றார்.

அவரின் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்து 1990 இல் பூட்டோ அரசாங்கம் நீக்கப்பட்டது.1990 அக்டோபர் தேர்தல்களுக்கு பின்னர் ஜியா ஆதரவிலான நவாஜ் ஷெரீப் அதிகாரத்திற்கு வந்தார்.நவாஜ் பிரதம மந்திரியாக பதவி வகித்த அதற்கடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, பூட்டோ எதிர்கட்சி தலைவராக இருந்தார். 1993 ஒக்டோபரில் மீண்டும் தேர்தல்கள் நடத்தப்பட்டன, அதில் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் கூட்டணி வெற்றி பெற்றது. பூட்டோ மீண்டும் பதவிக்கு வந்தார்.

### சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க) இலங்



பெனசீர் பூட்டோ

கையின் ஐந்தாவது ஜனாதிபதியாகவும் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகவும் இருந்தவர். இவர் இலங்கை சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவருமாவார். சந்திரிக்காவுக்கு 14 வயதாகும் போது அவரது தந்தை கொலை செய்யப்பட்டார். அதன் பின்னர், சந்திரிக்காவின் தாயான சிறி மாவோ பண்டாரநாயக்கா 1960 இல் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சந்திரிக்கா பாரிஸ் பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் தொடர்பான பட்டபடிப்பை முடித்தவர். 1972-1976 காலப்பகுதியின் நில மறுசீரமைப்பின் போது, இலங்கை நில மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு மேலதிக பிரதான இயக்குனராக பணியாற்றினார். 1976 - 1977 காலப்பகுதியில், கொத்தணிப் பண்ணைகளை அமைத்த ஜனவச ஆணைக் குழுவின் தலைவராக பணியாற்றினார்.1976- 1979 காலப் பகுதியில், உணவு மற்றும் விவசாய அமைப்பிற்கு விசேட ஆலோசகராக பணியாற்றினார்.

1978 இல் சந்திரிக்கா இலங்கையின் பிரபல நடிகரும், அரசியல்வாதியுமான விஜய குமாரணதுங்கவை மணந்தார். குமாரணதுங்க 1988இல் கொலை செய்யப்பட்டதை அடுத்து சந்திரிக்கா தனது பெயரில் இருந்த "ண" வை அகற்றிவிட்டு குமாரதுங்க என்றே பாவித்து வருகின்றார். 1994 ஒகஸ்ட் 19இல் சந்திரிக்கா மக்கள் முன்னணி தலைமையிலான அரசில் பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அவ்வாண்டு நவம்பர் மாதம்



சந்திரிகா குமாரதுங்க

நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக பதவியேற்றார்.

டிசம்பர் 18, 1999 இல் கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது, நடந்த குண்டு வெடிப்பில் தனது வலது கண்ணை இழந்தார். அத்தேர்தலில் சந்திரிக்கா ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற்று இரண்டாவது முறையாக சனாதிபதியாக பதவியேற்றார்.

### பேகம் கலீதா சியா

பேகம் கலீதா சியா வங்காளதேச அரசியல்வாதி ஆவார். இவர் 1991 முதல்



கலீதா சியா



சேக் ஹசீனா வாசிட்

1996 வரையிலும் பிறகு 2001 முதல் 2006 வரையிலும் வங்காளதேசத்தின் பிரதம மந்திரியாக இருந்தார். 1991இல் இவர் பதவியேற்ற போது, அந்நாட்டின் பிரதம மந்திரியான முதல் பெண்ணாகவும் இஸ்லாமிய உலகிலேயே மக்களால் தேர்ந்தெடுத்தக்கப்பட்ட அரசு ஒன்றின் தலைமை அமைச்சரான இரண்டாவது பெண்ணாகவும் (1988-1990 இல் பாக்கிஸ்தானின் பிரதம மந்திரியாக விளங்கிய பெனசீர் பூட்டோவுக்குப் பிறகு) விளங்கினார். இவரது கணவர் சியா வூர் ரகுமான் குடியரசுத் தலை வராக இருந்தபோது, நாட்டின் தலைமகள் எனும் தகுதியினைக் கொண்டிருந்தார்.

2001 ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரை ஆட் சியில் இருந்த கலீதா , தனது மகன் நடத்திய நிறுவனத்துக்கு சட்டவிரோதமாக உதவிகள் செய்ததாகவும், சிட்ட காங்துறை முகத்துக்கு வேலைக்கு ஆள் சேர்த்ததில் ஊழல் செய்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. அதன்பின் அவருக்கு 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஊழல் வழக்கில் 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

### சேக் ஹசீனா வாசிட்

சேக் ஹசீனா வாசிட் என்பவர் வங்காளதேச அரசியல்வாதியும் 2009ஆம் ஆண்டு முதல் 2024 ம் ஆண்டு வரை வங்காளதேசத்தின் பிரதமராக இருந்தவர். இவர் 1996 முதல் 2001 வரையான காலபகுதியிலும் அந்நாட்டின் பிரதமராக இருந்தார். மேலும் இவர் வங்காளதேசத்தின் இரண்டாவது பெண் பிரதமர் ஆவார். 1981 இலிருந்து வங்காளதேசத்தின் முக்கிய அரசியல் கட்சியான அ்வாமி லீக்கின் தலைவராக இருந்து வருகிறார்.

இவர் வங்காள தேசத்தின் முதல் அதிபரான சேக் முஜிபுர் ரகுமானின் ஐந்து பிள்ளைகளில் மூத்த வர் ஆவார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷேக் ஹசினா...

குற்றங்களைச் செய்ததாகக் கூறி, அந் நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப் பாயம் நேற்று மரண தண்டனை விதித் துத் தீர்ப்பளித்தது.

78 வயதான ஷேக் ஹசீனா, கடந்த ஆண்டு நடந்த போராட்டங்களை ஒடுக்கியதில் "சூத்திரதாரி மற்றும் முக்கிய கருவியாக" இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

கடந்த ஆண்டு ஜூலை 15 முதல் ஓகஸ்ட் 5 வரை நடந்த இந்த மக்கள் போராட்டங்களை ஒடுக்கியதில் சுமார் 1,400 பேர் வரை கொல்லப்பட்டனர் என்றும் ஆயிரக்கணக்கானோர் காய மடைந்தனர் என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை தெரிவிக்கிறது.

தனது 15 ஆண்டுகால "சர்வாதிகார" ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த போராட்டங்களை ஒடுக்குவதற்காக அவர் கொடிய சக்தியைப் பயன் படுத்த நேரடி உத்தரவுகளைப் பிறப் பித்ததற்கான ஆதாரங்களை வழக் குத் தொடுநர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தனர்.

அதிகாரத்தை இழந்ததிலிருந்து இந்தியாவில் தலைமறைவாக இருக் கும் ஷேக் ஹசீனா, நீதிமன்ற உத் தரவுகளை மீறி விசாரணைக்கு முன் னிலையாகாததால் அவர் தலை மறைவாக இருக்கும் நிலையிலேயே இந்த விசாரணை நடத்தப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)

## மருத்துவ பீட...

முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்.கந்தர்மடம் பகுதியிலேயே குறித்த மாணவன் கைது செய்யப் பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட போதைத் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப் படையில் மருத்துவ பீட இரண்டாம் வருட மாணவனைக் கைது செய்து சோதனையிட்டபோது, மாணவனின் உடைமையில் இருந்து 33 கிராம் 230 மில்லிக்கிராம் ஹசீஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த மாணவன் ஊவா மாகா ணத்தை சேர்ந்த பெரும்பான்மையின மாணவன் எனவும் மேலதிக விசார ணைகளின் பின்னர் நேற்று திங்கட் கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் மாணவனை முற்படுத்திய நிலையில் எதிர்வரும் 30ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறும் மன்று உத்தரவிட்டுள்ளது. (ம-7,33,104)

## கொடிகாமம்...

குறித்த வழக்கில் நேற்று ஆஜ ராகிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் கொடிகாமம் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட இளை ஞனின் மரணத்தில் சந்தேகம் இருப் பதாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கடமையில் இருக்க வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அந்த மரணம் சம்பவித்த நேரம் கடமையில் இருக்காமல் சட்டத்திற்கு முரணாக அந்த இடத்தில் நின்றிருந் தார்.

ஆகவே அந்த மரணத்தில் குடும் பத்தவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அந்த விடயத்தை நாங்கள் நீதிமன்றத் தின் கவனத்திற்குக் கொண்டு வந் தோம்.

அந்த வழக்கின் விசாரணைக்கு நீதிமன்றம் மீண்டும் உத்தரவு பிறப் பித்துள்ளது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டுள்ளது.

பொலிஸாரின் அராஜகமும் துஷ் பிரயோகமும் இந்த விடயத்தில் உள்ளதாக நாங்கள் சந்தேகிக்கின் றோம். நீதிக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம் என்றார். (ம-7,104)

## யாழில்...

படுகிறது. வேறு நாட்டவர்கள் தங்கள் நாட்டு கடலில் போட்ட சிலையே வளலாய் பகுதியில் கரையொதுங்கி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படு கிறது.

மியான்மார் நாட்டின் சம்பிரதாயங் கள் பிரகாரம் அங்கு உயிரிழந்தவர் களின் நினைவாக கடலில் விடப்படும் மூங்கிலிலான தொப்பங்கள் கடந்த காலங்களில் வடமராட்சிப் பகுதிகளில் கரையொதுங்கி இருக்கின்றன.

அவ்வாறே சேதமடைந்த சிலையை கடலில் போட்ட நிலையில் அந்த சிலை வளலாய்ப் பகுதியில் கரையொதுங்கி இருக்கலாம் என நம்பப்படுகிறது.

குறித்த சிலை தற்போது வளலாய் கடற்தொழிலாளர் சங்கக் கட்டடத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள் நிலையில் சிலை கரையொதுங்கி யமை தொடர்பில் அச்சுவேலிப் பொலி ஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர். (ம-7,33,104)

## புத்தர் சிலை...

யுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரை யாற்றும்போதே இவ்வாறு தெரிவித் தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கை யில்,

புத்தர் சிலை விவகாரத்தில் பொலிஸாரின் தலையீடு தேவை யில்லை பதற் றங்களை உரு வாக்கும் என எச்சரித்த சஜித் பிரேமதாஸ, பௌத்த மதத் துக்கு அனை வரும் முன் னுரிமை அளி யுங்கள் என்றும் அவர் வலியுறுத் தினார்.

புத்த மதத் துக்கு முதன்மை யான இடத்தை வழங்கும் அதே வேளையில், பிற மதங்க ளுக்கு மரியாதை அளிப்பதை உறுதி செய்யும் அரசமைப்பின் இரண்டாம் அத்தியாயத்தை மேற்கோள் காட்டி, 1951இல் நிறுவப் பட்டு 2010இல் புத்த விவகாரத்துறை யில் பதிவு செய் யப்பட்ட இந்தக் கோயில், வழி பாட்டுத்தலமாக சட்டபூர்வ அந் தஸ்தைக் கொண்டுள்ளது என்று அவர் சுட் டிக்காட்டினார்.

புத்தர் சிலை களை வைப்பது மற்றும் அறப் பள்ளிக் கட்டடங் களை நிர்மா ணிப்பது தொடர் பாக உத்தரவு களைப் பிறப் பித்தமைக்காகப் பொலிஸாருக்கு அவர் கண்டனம் தெரிவித்தார்.

இதுபோன்ற செயல்கள் [illegible] பதற் றங்களைத் தூண்டக்கூடும் என்றும் அவர் எச்சரித்தார். (ம-7)

## வந்தமர்ந்த...

மேயர் க.செல்வராஜாவால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை கடற்கரையில் மாநகர சபைக்குச் சொந்தமான பகுதி யில் முன்அனுமதியின்றி சட்டவிரோத மாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் மீண்டும் நேற்று பிற்பகல் புத்தர் சிலை வைக்கப்பட்டு சமய வழிபாடுகள் நடைபெற்றன.

திருகோணமலை கடற்கரையில் மாநகர சபைக்குச் சொந்தமான பகுதி யில் முன் அனுமதியின்றி சட்ட விரோதமாக அமைக்கப்பட்டு வரும் பௌத்த வணக்கஸ்தலத்தில் அடாத் தாக புத்தர் சிலை வைக்கப்பட்டமைக்கு எதிராகவும் இது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எனத் தெரிவித்து திரு கோணமலை மாநகர சபையின் மேயர் க.செல்வராஜாவால் துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்பி ...

திருகோணமலை சட்ட விரோத விகாரை அமைப்பு குறித்து நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர் சிலையை நேற்றிரவு (நேற்று முன்தினம்) அகற்றியபோது, சாதாரண சிங்கள மக்கள் அதை எதிர்க்கவில்லை. ஏனெனில், இனவாதத்தையும் மதவாதத்தையும் நீக்குவதாக நீங்கள் சொன்னதை நம்பி அவர்கள் உங்களுக்கே வாக்களித்திருந்தார்கள்.

இங்கிருக்கும் திருமலைக்கான தமிழ் பாராளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் தெரிவு செய்திருந்தார்கள்.

நீங்கள் எடுத்த நடவடிக்கையை எதிர்த்ததெல்லாம், சிங்கள காடையர்கள் மட்டுமே. அந்த இனவாத, மதவாத காடைத்தனத்தை கண்டு நீங்கள் பின்வாங்கியிருந்திருக்கக் கூடாது.

உண்மையில் நீங்கள் என்ன செய்திருக்க வேண்டுமெனில், மக்களிடம் சென்று எது சரி எது பிழை என்பதை, எப்படியான அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது என்பதை நேர்மையுடன் சொல்லியிருந்திருக்க வேண்டும்.

ஆனால் அதற்குப் பதிலாக நீங்கள் இப்போது செய்ததெல்லாம், நீங்கள் (இனவாதிகள் இல்லை என) சொன்னதை நம்பி உங்களுக்கு வாக்களித்த தமிழ் மக்களுக்கும் உங்களுக்கு வாக்களித்த சிங்களவரல்லாத வாக்காளருக்கும் முழுமையான துரோகத்தை இழைத்திருக்கிறீர்கள் எனத் தெரிவித்தார். (ம-7,104)

## பேரினவாத...

பணிந்துள்ளது. என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அவரது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நேற்றிரவு(நேற்று முன்தினம்) அமைச்சரின் கட்டளைப்படி திருகோணமலை கடற்கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட சிலை பொலிஸாரினால் அகற்றப்பட்டபோது,

அரசாங்கம் இனவாத எண்ணமில்லாமல் சரியாக நடந்து கொள்கிறது என்று சிலர் நினைத்தார்கள். ஆனால் அப்படியல்ல என்பதை சில மணி நேரத்துக்குள்ளேயே அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தினார்.

பாதுகாப்புக்காகவே சிலை அகற்றப்பட்டதாகவும் அது மீள நிறுவப்படும் என்றும் வெட்கமில்லாமல் அறிவித்த போதே சகல மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்கள் என்ற வாக்குறுதி காற்றில் பறக்க விடப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி அரசும் முன்னைய அரசுகளைப் போலவே ஒரு இனவாத, சிங்கள பௌத்த பேரினவாத அரசு என்பதை நிறுவியுள்ளது. இக் கட்சியைச் சேர்ந்த அனைத்து தமிழ் உறுப்பினர்களும், திருகோணமலை உறப்பினர் அருண் ஹேமச்சந்திரா உட்பட உடனடியாக இராஜினாமாச் செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# திருகோணமலைச் சம்பவத்தை யாரும் மதவாதமாக மாற்ற வேண்டாம்

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

(கொழும்பு)

திருகோணமலைச் சம்பவத்தை யாரும் இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம். தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை எனப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

திருகோணமலை சம்பவத்தை ஒரு சிலர் இனவாதமாக்க முயற்சிக்கின்றனர். திருகோணமலையில் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளமை உண்மை. அதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். அதேநேரம் நீதிமன்றிலும் வழக்கு உள்ளது. தற்போது அது நீதிமன்ற நடவடிக்கையாகும். அதனால் அந்த நீதிமன்ற நடவடிக்கையில் நாங்கள் தலையிடுவதில்லை எனவே இந்த சம்பவத்தை இனவாத, மதவாதமாக மாற்ற வேண்டாம்.

அதேநேரம் நீதிமன்ற சுயாதீனத்தை உயர்ந்த மட்டத்தில் பாதுகாத்துவரும் அரசாங்கம், எமது அரசாங்கம் என்பதை பெருமையுடன் தெரிவிக்கிறேன் என்றார். (ம-7)


**கனடா - வரி இல்லாமல்**
**விரைவு பொதிகள் சேவை**

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2640/- |
| 21-27 Kg | 2430/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4151)

UK 11Kg - 1390/- France 11Kg - 2160/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 076 822 6241 076 822 6237



**ரொம் ஏஸ் மாங்காய் விற்பனைக்கு**

ரொம் ஏஸ் (Tom Ejc) மாங்காய் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
**075 719 0110**



## Divorce மணப்பெண் தேவை

01.காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், ACCA, Own business, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58386)
02.வடமராட்சி, இந்து, 1985, கார்த்திகை, MSc electrical Engineer, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (29463)
03.பளை, இந்து, 1984, அவிட்டம், phd, Uk citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(33058)
04.காரைநகர், இந்து, 1986, மகம், phd lecturer, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(36878)
05.கரவெட்டி, இந்து, 1984, விசாகம், Bachelor of computer Application, Uk citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(37556)
06.திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, BSc, London citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(46812)
07.புலோலி, இந்து, 1982, சுவாதி, Bsc Engineering, degree (UK), Australia citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (35391)
08.நெல்லியடி, 1991, பூராடம், HND(Jaffna university), USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(47452)
09.நல்லூர், இந்து, 1982, அத்தம், Masters in electrical Engineering, USA + canada, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (25039)
10.யாழ்ப்பாணம், இந்து, 1982, அத்தம், Masters in electrical Engineering, USA+canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24750)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (1712)

S.Sharma J.P www.thaalee.com 077 539 3728



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4349) 076 825 7716 (ஆகாஸ்)



**வீட்டுப் பணிப்பெண் தேவை**

எங்கள் இல்லத்திற்கு முழு நேர வேலைக்கு ஒரு அனுபவமுள்ளபெண் தேவை.
வேலை இடம் : மட்டுவில்
சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.
0094775001476
0762010849 (1714)



**வேலையாட்கள் தேவை**

நாவற்குழியில் இயங்கிவரும் தனியார் நிறுவனத்திற்கு Welder, Plant operator மற்றும் Truck mixer driver தேவை.

தொடர்புகளுக்கு :
077 424 4237,077 6393412
077 068 5170 (5945)



**மணல் பொமிட்**

யாழ். மாவட்டத்திற்கு பழுப்புநிற மண்ணுடன் பொமிட் போட்டுத் தரப்படும்.
30,000/=
076 324 9977 (1715)



**காணி விற்பனைக்கு**

நீர்வேலிச் சந்தியில் வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நல்ல சூழலில் 7 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (5913)

071 016 9768, 076 481 1296
076 917 0364, 077 437 0882



**மணல் விற்பனைக்கு**

யாழ். மாவட்டத்தில் கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற மணல் 50,000இல் இருந்து விற்பனைக்குண்டு. (1716)
076 375 7367



**யாழ்ப்பாணத்தில் Voyzant**
**விசாக்கள்**



இந்தியா, அமெரிக்கா, கனடா, லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, நோர்வே, கொலன்ட், டென்மார்க், பெல்ஜியம், மலேசியா, நியூஸ்லாந்து, அவுஸ்திரேலியா, சீனா போன்ற நாடுகளிற்கு விசா சேவைகள்

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
+94763458646, 021 222 6866 (5725)



**கணக்கு பதியுனர்கள் தேவை**

மானிப்பாயில் உள்ள எமது நிறுவனத்திற்கு வர்த்தகத் துறையில் கல்வி கற்ற கணனி அறிவுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
30,000 - 45,000 வரை வழங்கப்படும்.
071 110 0066/ 077 213 7266
JAFFNA ARCHITECT & ENGINEERS (C-4352)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல. [illegible] பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org